**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.538/2018**

**Prosecution Witness : 1**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : செல்வராஜ் | **Caste** | : | |
| **Father's Name** | : பழனிவேலு | **Calling** | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் ஓய்வு |
| **Village** | : திண்டுக்கல் | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **62** |
| | | **Dated** | : | **19.08.2025** |

**19.08.2025**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 1 **திரு. செல்வராஜ்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 1** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தமிழ்நாடு காவல்துறையில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று திண்டுக்கல்லில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். கடந்த 22.06.2017ம் தேதி தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது அன்றையதினம் காலை 5.30 மணிக்கு நானும் சார்பு ஆய்வாளர் செல்வி சூர்யதிலகராணி, சிறப்பு சார்பு ஆய்வாளர் சுப்ரமணி, தலைமை காவலர் அரியவேல் ஆகியோருடன் மணல் திருட்டு சம்பந்தமாக குளத்தூர் சுடுகாடு அருகில் உள்ள தார்ரோட்டில் வாகன தணிக்கை செய்தபோது அவ்வழியாக வந்த TN 57 L

1372 407 டிப்பர் லாரியை தடுத்து நிறுத்தி அதனை ஓட்டி வந்த ஓட்டுநர் பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த முனியாண்டி மகன் முத்துப்பாண்டி என்பவரை சார்பு ஆய்வாளர் அவர்கள் விசாரித்தார்கள். அவர் தாமாக முன்வந்து மேற்படி லாரியில் திருட்டு மணல் இருப்பதாக தெரிவித்தார். மேற்படி மணலை சந்தன ஆற்றில் அரசு அனுமதி பெறாமல் திருடிக்கொண்டு வந்ததாக ஒப்புக்கொண்டதின் பேரில் உடன் வந்த போலிஸ் சாட்சிகளான சிறப்பு சார்பு ஆய்வாளர் சுப்ரமணி, தலைமை காவலர் அரியவேல் முன்னிலையில் லாரி மற்றும் ஒரு யூனிட் மணலை அத்தாட்சியில் கைப்பற்றினார். காலை சுமார் 6.15 மணிக்கு கைப்பற்றி அத்தாட்சியில் கையொப்பம் செய்தார். பின்பு ஓட்டி வந்த லாரி ஓட்டுநர் முத்துப்பாண்டியை கைது செய்ய உதவியாக இருந்தோம். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பொதுவாக நாங்கள் ரோந்து பணிக்கு செல்லும்போது உயர் அதிகாரியின் அனுமதி பெற்று தான் செல்வோம் என்றால் சரிதான். சம்பவத்தைப் பற்றி யார் எனக்கு தகவல் சொன்னார் என்று தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு யார் என்னை அழைத்து சென்றார்கள் என்றால் சூரியதிலக ராணி சார்பு ஆய்வாளர் அவர்கள். நாங்கள் ரோந்துக்கு செல்லும்போது என்னென்ன பொருட்கள் கொடுக்கப்படும் என்றால் வாக்கிடாக்கி போன்றவை கொடுக்கப்படும். சம்பவ இடம் எந்த திசையில் உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. நாங்கள் எங்கே ரோந்திற்கு சென்றோம் என்றும், எதற்காக சென்றோம் என்றும் பாக்கெட் டைரியில் குறிப்பிடுவோம் என்றால் சரிதான். மேற்சொன்ன பாக்கெட் நோட்டை அதிகாரியிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். என் முன்னால் எதிரியை கைது செய்யும் போது ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை. நான் சொல்வது போல் சம்பவ இடம் சென்று நானும் எனது அதிகாரிகளும் செல்லவில்லை என்றாலும் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் போன்றவை தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்பந்தமாக நான் புகார்அளிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பந்தமாக VAO அல்லது கனிமவள அதிகாரியிடமோ தகவல் சொன்னோமா என்றால் சொல்லவில்லை. சம்பவ இடமானது பொதுமக்கள் அதிகமாக வசிக்கக் கூடிய இடம் என்றால் சரிதான். பொதுமக்கள் யாரையும் சாட்சியாக சேர்த்து விசாரிக்கவில்லை என்றால் சாட்சியம் அளிக்க யாரும் முன்வராததால் யாரையும் சாட்சியாக சேர்த்து விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சி தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2025.08.20 20:56:24 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.538/2018**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : அரியவேல் | **Caste** | : | |
| **Father's Name** | : வேலாயுதம் | **Calling** | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| **Village** | : திண்டுக்கல் | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | 56/2025 |
| | | **Dated** | : | 19.08.2025 |

**19.08.2025**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 3 **திரு.அரியவேல்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 2** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.06.2017ம் தேதி தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது காலை 05.30 மணிக்கு நானும் சார்பு ஆய்வாளர் சூரியதிலகராணி, சிறப்பு சார்பு ஆய்வாளர்கள் செல்வராஜ், சுப்ரமணி ஆகியோருடன் குளத்தூர் சந்தனவர்த்தினி ஆறு அருகே மணல் எடுப்பதாக தகவல் கிடைத்தது. அந்த வழியாக ஒரு லாரி வந்தது. அதனை நிறுத்தி சார்பு ஆய்வாளர் விசாரித்தார். முத்துப்பாண்டி என்பவர் ஒரு யூனிட்

மணலை லாரியில் எடுத்து வந்ததாக சொன்னார். சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்தது பற்றி தெரிந்ததால் சார்பு ஆய்வாளர் முத்துப்பாண்டியை கைது செய்து மணலை அத்தாட்சி தயார் செய்து என்னிடமும் சிறப்பு சார்பு ஆய்வாளர் சுப்ரமணியிடமும் கையொப்பம் பெற்றார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது. (**அத்தாட்சி அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவத்தை பற்றி தகவல் யார் சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். குளத்தூர் ஆற்றில் எந்த பகுதியில் மணல் அள்ளினார்கள் என்றால் சுடுகாடு பகுதி திசை தெரியாது. அத்தாட்சி தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். ரோந்து பணிக்கு செல்லும் போது GD entry யில் பதிவு செய்தோமா என்றால் பதிவு செய்தோம். எதிரி என் முன்னால் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரியை சம்பவ இடத்தில் வைத்து கைது செய்தும், அத்தாட்சியை சொன்ன நாள், சொன்ன இடத்தில் தயார் செய்யவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் எனது மேல் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க புள்ளி விவர கணக்கிற்காக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2025.08.20 20:56:32 +0530

Judicial Magistrate No.II
Dindigul.